tamilguru.lk

## திருத்தம்

## கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2023

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் இல. அமப/23/0386/605/012 - 1 (A) மற்றும் 2024, சனவரி 02 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கணக்காய்வுப் பரீட்சகர்

சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2023" தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 2023.10.27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2356 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திர அறிவிப்பு இல. 431 இற்கான வர்த்தமானி அறிவிப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்குறித்த வர்த்தமானி அறிவிப்பின் தலைப்பான "அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை" என்பது "அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை" எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

(ii) மேற்குறித்த வர்த்தமானி அறிவிப்பின் "கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி" எனும் சொற்தொடர் பயன்படுத்தப்பட்டுள்ள சகல சந்தர்ப்பத்திலும் அரசாங்க கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி" எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

(iii) மேற்குறித்த வர்த்தமானி அறிவிப்பில் பரீட்சைத் திகதி, பந்தி இல. 1, பந்தி இல. 2 (i), பந்தி இல. 3, பந்தி இல. 5(ii), பந்தி இல. 7 (அ) மற்றும் பந்தி 7 (இ) பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

I. பரீட்சைத் திகதி.- பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் 2024, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

II. 1. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும். எந்த ஓர் வெற்றிட எண்ணிக்கையையும் அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாது விடுவதற்கு கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

III. 2. (i) சாதாரண வர்த்தமானியின் I ஆம் பிரிவு II (அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகளின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இல. 2366/ 3 மற்றும் 2024, சனவரி மாதத்தின் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அச்சேவைக் குறிப்பிற்கு இதனை அடுத்து மேற்கொள்ளப்படும் திரத்தங்களுக்கும் இல. அமப/ 23/ 0386/ 605/ 012 - I மற்றும் 2023, மாச்சு 08 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஆட்சேர்க்கப்படும் நடைமுறை மீளாய்வு செய்தல்" தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இல. அமப/23/0386/605/012 - I (A) மற்றும் 2024, சனவரி 02 ஆந் திகதிய "அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை-2023" தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்ட தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியில் நியமிக்கப்படுவார்கள்.

IV. 3. சம்பள அளவுத் திட்டம் - இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு உரித்தான சம்பள அளவுத் திட்டம் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைக் குறிப்பின் படி AS - 01 - A சம்பளக் குறியீட்டு இலக்கததிற்கு உரித்தான சம்பளம் ரூபா 37,905 - 10 × 660 - 11 × 775 - 15 × 930 -ரூபா 66,760.00 ஆகும்.

V. 5. (ii) 2023, நவெம்பர் 24 ஆந் திகதி, அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அவ் உத்தியோகத்தர்களின் வயது 22 இற்கு குறையாத வகையிலும் 40 வயதிற்கு மேற்படாத வகையிலும் இருத்தல் வேண்டும். இதன்படி, 2001.11.24 ஆந் திகதி அல்லது இதற்கு முன்னரும் 1983.11.24 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னருமான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரமே விண்ணப்பிப்பதற்கான தகைமை உள்ளது.)

VI. 7.(அ) விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Application - Recruitment Exams" இன் மூலம் வெளியிடப்பட்டள்ளதுடன் நிகழ்நிலை (Online) மூலம் மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024.02.02 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

VI. 7. (இ) விண்ணப்பங்கள் 2024.03.01 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவு பெறும்.

VIII. மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் இலக்கப் பந்தியில் "கணக்காய்வாளர் தலைமை அதிபதியால்" என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால்" எனவும் 5 ஆம் இலக்க பந்தியின் முதலாம் குறிப்பு மற்றும் இரண்டாம் குறிப்பின் (ஆ) பந்தியில் "கணக்காய்வாளர் தலைமை அதிபதியால்" என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால்" எனவும் 11 ஆம் பந்தியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால்" என்பது " கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால்" எனவும் 13 (ஆ) ஆம் இலக்க பந்தியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால்" என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால்" எனவும் 14 ஆம் இலக்க பந்தியின் "கணக்காய்வாளர் தலைமை அதிபதி வசமானது" என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு வசமானது" எனவும் 15 ஆம் இலக்க பந்தியின் "கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு" என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு எனவும் 16 ஆம் இலக்க பந்தியின் "கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் என்பது "கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம்" எனவும் திருத்தஞ் செய்யப்படல் வேண்டும்.

(iv) இவ் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட மேற்குறித்த திருத்தங்கள் தவிர்ந்த 2023.10.27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2356 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திர அறிவிப்பு இல. 431 இற்கான வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் (எழுத்து மூலப் பரீட்சையின் பாடவிதானம் உள்ளடங்கலாக) மாற்றமின்றி உள்ளன. இதன்படி, இதுவரையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீள விண்ணப்பிப்பதற்கான அவசியமில்லை.

ட. கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு.

2024, சனவரி 31.

02-121